# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : DW-1 — Date : 12.11.2024
Case No. : O.S. 40/2019 — Nationality : Indian
Name : முருகானந்தம் — Religion :
Father's/Husband's Name : அழகர்சாமி — Age : 24
Village :
Taluk :

பி.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தாத்தா பெயர் சீனிவாசன் என்றால் சரிதான். மேற்படி சீனிவாசன் எனது தகப்பனாரின் மாமானார் என்ற முறையில் எனக்கு தாத்தா என்றால் சரிதான். பிசாஆ 1 ஆவணத்தைப் பற்றி எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிசாஆ 1 உத்தரவு பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் ஆர்டிஆர் எங்களுக்கு சாதகமாக உத்தரவாகி வந்துள்ளது. மேற்படி உத்தரவு ஆர்டிஆர் பதிவு சம்மந்தமாக எங்களுக்கு சாதகமாக ஏற்பட்ட உத்தரவு இல்லை என்றாலும் ஆர்டிஆர் பதிவு சம்மந்தமான விசாரணையில் என்னை தரப்பினராக சேர்க்க உத்தரவிட்டு மீண்டும் விசாரணைக்கு அனுப்பப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது மேற்படி மனுவும் வருவாய் துறையில் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 117/2013 ல் ஏற்பட்ட தீர்ப்பிணை ஆட்சேபித்து மேல் முறையீடு தாக்கல் செய்ததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர் வழக்குரையில் மேற்படி மேல்முறையீடு குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர் வழக்குரையில் மேல் முறையீடு

சம்மந்தமாக குறிப்பிடவில்லை என்றாலும் அது சம்மந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு நான்தான் வழக்கறிஞருக்கு விவரம் கூறினேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் நாளது தேதி வரையில் வாதி அனுபவத்தில் இருந்து வருவதாக வட்டாட்சியர் அளித்த வாசாஆ 3 மற்றும் வாசாஆ 4 சான்றை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பொய்யானதாகும். மேற்படி ஆவணங்கள் பொய்யானவை என்று எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. சையதுஅலி என்பவர் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். நான் மேற்படி சொத்தில் குத்தகைதாரர் என்ற முறையில் இருந்து வருகிறேன். அவ்வாறு நான் குத்தகைதாரர் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி குத்தகை சீட்டு எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்து நாளது தேதிவரை வாதியின் சாகுபடியில் இருந்து வருகிறது என்றாலும் நான் வழக்கிற்காக நான் குத்தகை சாகுபடி செய்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முன் வழக்கான அசல் வழக்கு எண் 117/2013 வழக்கு தாவா சொத்தைப் பொறுத்து முழுமையான விசாரணைக்கு பிறகு தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றாலும் அதனை ஆட்சேபித்து நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.